215—

பேருந்து வசதி

வினா எண் 1439—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கத்திலிருந்து பூந்தமல்லிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கத்திலிருந்து அடையாறு, வேளச்சேரி, பட்டினப்பாக்கம், வடபழனி, பிராட்வே, கோயம்பேடு மற்றும் வள்ளலார் நகர் ஆகிய இடங்களுக்கு 9 வழித்தடங்களூடாக 57 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், வில்லிவாக்கம் வழியாக 20 வழித்தடங்களூடாக மொத்தம் 78 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து பூந்தமல்லிக்கு மொத்தம் 16 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனினும், சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையினை ஏற்க, பூந்தமல்லியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை இயக்கப்படுகின்ற பேருந்துகளில் இரண்டினை வில்லிவாக்கம் வரை நீட்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

216—

பேருந்து வசதி

வினா எண் 1440—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, ராஜமங்கலம் பகுதியிலிருந்து பாரிமுனைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் எம் 20 எம் (பெரவள்ளூர் குமரன் நகர்- பிராட்வே)-இல் ஒரு பேருந்து சென்ட்ரல், [illegible], [illegible], சபாபதி, கம்பர் அரங்கம், வில்லிவாக்கம், வில்லிவாக்கம் ரயில்வே கேட், ராஜமங்கலம், சீனிவாசநகர், பூம்புகார் மற்றும் கொளத்தூர் வழியாக இயக்கப்பட்டது. ஆனால், தற்போது வில்லிவாக்கம் ரயில்வே கேட் பகுதியில் ரயில்வே சுரங்கப் பாதை அமைக்கும் பணி நடைபெறுவதனால், இவ்வழித்தடம் மாற்றுப் பாதையில் சபாபதி மற்றும் கம்பர் அரங்கத்திற்கு பிறகு, [illegible] இந்தியா [illegible], உள்வட்டச் சாலை, சீனிவாச நகர், பூம்புகார், கொளத்தூர் என தற்போது இயக்கப்படுகிறது. ரயில்வே சுரங்கப் பாதை அமைக்கும் பணியின் முடிவு பெற்றவுடன் வழித்தடம் எண் எம்.20எம். பேருந்து முந்தைய வழித்தடமான வில்லிவாக்கம் அருகேயுள்ள ராஜமங்கலம் வழியாக மீண்டும் இயக்கப்படும்.

217—

பேருந்து வசதி

வினா எண் 1441—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வில்லிவாக்கத்திலிருந்து கோயம்பேடு மார்க்கெட் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் எம் 46 ஏ கட்-இல் ஒரு பேருந்து வில்லிவாக்கத்திலிருந்து ஐ.சி.எஃப்., என்.எஸ்.கே. நகர், எம்.எம்.டி.ஏ. காலனி, சென்னை புறநகர் பேருந்து நிலையம் வழியாக கோயம்பேடு மார்க்கெட்டிற்கு 20 பயண நடைகள் நாளொன்றிற்கு இயக்கப்படுகின்றன.